## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி – 2017

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் ("கல்லூரி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2008 இன் 31 ஆம் இலக்க வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 இன் 1882/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2008 இன் 31 ஆம் இலக்க வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வை மேற்கொண்டு அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான பொருத்தமானதும் போதுமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றிருக்கவில்லை.

### 1.4 அபிப்பிராய மறுப்புக்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக் கூற்றிலும், நிதிச் செயலாற்றல் கூற்றிலும், தேறிய சொத்துக்களில் மாற்றக் கூற்றிலும், காசுப்பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களுக்கும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

## 2. நிதிக்கூற்றுகள்

### 2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றை என்னால் பெறமுடியாதிருந்தது. அதன் காரணமாக இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

கணக்காய்வின்போது பின்வரும் கணக்கீட்டு குறைபாடு அவதானிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 112 மில்லியன் பெறுமதியில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் கட்டப்பட்ட ஒரு கட்டடம் கல்லூரியால் பொறுப்பேற்கப்பட்டு பயன்படுத்தப்படுவதுடன் 30 ஆனி 2018ம் திகதி வரை நிதிக்கூற்றுகளுக்கு கொண்டுவரப்படவில்லை. இதன் விளைவாக 31 திசெம்பர் 2017 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் பெறுமதி குறித்த தொகையினால் குறைத்துக்காட்டப்படுவதுடன் மேலும் கடந்த மூன்று ஆண்டுகளாக கட்டடத்திற்கான தேய்மானமும் ஏற்படுத்தப்படவில்லை.

### 2.2.2 சான்றின்மைகள்

கூட்டு மொத்தம் ரூபா 66,618,634 ஆன நிகழாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகள், கொள்வனவுகள் மற்றும் ஏனைய செலவினங்களை அனுமதியளித்தல், கொடுப்பனவுகளை சான்றுறிதிப்படுத்தல், மூல சிட்டைகள், வேண்டுகைகள், பொருள் பெறுகை குறிப்புகள், உறுதிப்படுத்தல்கள் மற்றும் சிபாரிசுகள் போன்ற சான்றுகளின்மையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஏற்று சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைவரி சட்டம் (சிறப்பு ஏற்பாடு) | சட்டத்தில் குறிப்பிட்டவாறு ரூபா 25,000 க்கு மேற்பட்ட கொடுப்பனவுகளின் போது முத்திரைவரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் | |
| (i) நிதி ஒழுங்கு விதி 136(6) | அதிகாரமளிக்கப்பட்ட நபர்கள் தொடர்பான பதிவேடுகள் சான்றுறுதிப்படுத்தும் அலுவலரின் ஏடுகளுடன் மாதாந்தம் ஒரு தடவையாவது ஒப்பீடு செய்து இணக்கம் மேற்கொள்ளப்படவில்லை. |
| (ii) நிதி ஒழங்கு விதி 267 | சம்பளங்களும் கூலிகளும் ஊழியர்களுக்கு கொடுக்கும் போது சம்பள தாளில் அவர்களது ஒப்பம் பெறப்பட வேண்டும் என்பது விதி. எவ்வாறெனினும் ரூபா 455,631 க்கான அலுவலகர்களது சம்பள கொடுப்பனவின் போது குறிப்பிட்டதற்கமைய ஒப்பம் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) நிதி ஒழுங்கு விதி 785(4) மற்றும் 802 | வாகனம் தொடர்பான திருத்தத்தின் தன்மை, திருத்தத்திற்கு ஏற்பட்ட செலவினம் மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்கள் வாகன லொக் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை |
| (இ) 31 பங்குனி 2016 திகதிய 05/2016 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | கல்லூரியின் சொத்துக்களின் உள்ளிருப்பை உறுதிப்படுத்த வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படவில்லை |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி கல்லூரியின் செயற்பாடானது முன்னைய ஆண்டில் விளைந்த மிகை ரூபா 2,953,025 க்கு எதிராக நிகழாண்டின் போது ரூபா 6,677,760 ஆன தேறிய பற்றாக்குறை விளைந்திருந்தது. நிகழாண்டின் போது நிதி விளைவுகளில் ஏற்பட்ட பற்றாக்குறைக்கு முக்கியமான காரணிகளாக ஊழிய செலவில் ஏற்பட்ட ரூபா 6,415,230 ஆன அதிகரிப்பு மற்றும் அரச மீண்டெழும் மானியத்தில் ஏற்பட்ட 3,402,337 ஆன வீழ்ச்சி என்பன அமைந்திருந்தன.

மீளாய்வாண்டிற்கான கல்லூரியின் பெறுமதி சேர்க்கையானது ஊழியச்செலவு, தேய்மானம் மற்றும் வரிகளை கணக்கிற்கு எடுத்த பின்னரான தொகையான ரூபா 75,303,062 ஆக அமைந்திருந்ததடன் இது முன்னைய ஆண்டில் ரூபா 75,266,113 ஆக அமைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மொத்த செயற்பாட்டு செலவினமாக ரூபா 90,939,647 இருந்தபோது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான தேய்மானமாக ரூபா 46,105,903 காணப்பட்டதுடன் இது நிகழாண்டுக்கான மொத்த செலவீனத்தில் 51 சதவீத்ததை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடலும் செயற்திறனும்

கல்லூரியால் தொடர்ந்து வரும் 3 ஆண்டுகளுக்கான இலக்குகளை இனம்காணக்கூடிய வகையில் கூட்டிணைந்த திட்டமோ அல்லது வணிகத்திட்டமோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கூட்டிணைந்த திட்டம் அல்லது வணிகதிட்டத்தின் வழியில், கல்லூரி தனது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்க தவறியிருந்தது. இதனால் கல்லூரியினது செயலாற்றலினை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது.

பயண மற்றும் சுற்றுலா முகாமைத்துவம், நிகழ்ச்சி முகாமைத்துவம், கடலியல் கலாச்சாரம் மற்றும் கடலியல் வளமுகாமைத்துவம், அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடலில் உயர் தேசிய டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகள் ஏனைய பல்கலைக்கழக கல்லூரிகளால் நடாத்தப்படுகின்ற போதும் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியால் இக் கற்கை நெறிகள் நடாத்தப்படுவதில்லை.

## 4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு வருகை விரிவுரையாளர்களை ஆட்சேர்க்கும் போது வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்படவேண்டும் என கல்லூரிக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. எவ்வாறெனினும் புதினப் பத்திரிக்கைகள் அல்லது ஊடகங்களில் விளம்பரப்படுத்தாமலும் நேர்முகத் தேர்வு நடாத்தாமலும் வருகை விரிவுரையாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். இதன் விளைவாக சிறந்த தேர்ச்சியான விரிவுரையாளர்களை கொண்டு கற்கை நெறிகளை கொண்டு நடாத்தும் வாய்ப்பை கல்லூரி இழந்திருந்தது.

(ஆ) வருகை விரிவுரையாளர்கள் தமது விரிவுரை மணித்தியாலங்களையும் செயன்முறை மணித்தியாலங்களையும் நியமன கடித நிபந்தனையின் படி முழுமையாக பூரணப்படுத்தியிருக்கவில்லை. இதனால் கற்கை நெறித்திட்டங்கள் முழுமையாக வருகை விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படவில்லை இதன் விளைவாக கல்லூரி முகாமைத்துவம் கல்வி நிகழ்ச்சி திட்டத்தை வினைத்திறனாக செயற்படுத்த தவறியிருந்தது.

(இ) வருகை விரிவுரையாளர்களுக்கான வருகைப் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்காததுடன் வருகைப் பதிவேட்டில் மாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.3 மோட்டார் வாகன பயன்பாடு

ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு சுப்பர் டீசல் கொள்வனவு செய்வதற்கான அனுமதியை உரிய அதிகார தரப்பிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

இலக்குகள் நோக்கங்களை அடைந்த கொள்வதற்கான மைல்கல் உடனான கல்லூரியின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவகையில் 2030 ஆண்டில் அடைந்து கொள்வதற்கான மேற்கூறப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விழிப்புணர்வின்மையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் இனம் கண்டு கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 6.1 உள்ளக கணக்காய்வு

2009 ஆனி 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009 (1) ஆம் இலக்க நிதிச் சுற்றுநிரூபத்தின் படி 2014 ஆம் ஆண்டிலிருந்து உள்ளக கணக்காய்வு அலகு உருவாக்கப்பட்டிருக்காமையால் கல்லூரியின் உள்ளக கட்டுப்பாட்டு முறையில் பல்வேறு பலவீனங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

### 6.2 கணக்காய்வு குழு கூட்டம்

2009 ஆனி 09ம் திகதிய டிஎம்ஏ/2009 (1) ஆம் இலக்க நிதிச் சுற்றுநிரூபத்தின் படி நிகழாண்டின்போது கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**6.3 பெறுகை நடைமுறைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பெறுகை வழிகாட்டி 6.3.3(ஆ) பிரிவின்படி ஒவ்வொரு கேள்வியும் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் பிரசன்னத்தில் திறக்கப்படவேண்டும். எவ்வாறெனினும் ரூபா 16,134,232 பெறுமதியான 24 கேள்விகள் ஏனைய கேள்வி திறப்பு அங்கத்தவர்கள் கேள்வியாளர்கள் மற்றும் கேள்வியாளர் பிரதிநிதிகள் பங்குபற்றுதலின்றி நிதியாளரால் திறக்கப்பட்டிருந்தது.

(ஆ) நூலக கரும பீடம், நில சமப்படுத்தல் வேலை, தளபாடம், இலத்திரனியல் பயிற்சி முறைமை, அலுமினிய பிரிவிடல் வேலை, பல் இலக்க அளவுகோல், டிசி மின் வழங்கல், சிசிரீவி வயர் என்பன ரூபா 4,213,156 க்கு கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் பெறுகை வழிகாட்டி 5.3.2 ற்கமைய கேள்வியாளர்களால் பொருத்தமான அடிப்படை தகவல்கள் கேள்வியின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.4 பாதீட்டு கட்டுப்பாடு**

பாதீட்டு, உண்மை வருமானங்கள் செலவினங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. அது முகாமைத்துவ கட்டுப்பாட்டில் பாதீடானது வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிராமையை சுட்டிக்காட்டுகிறது.

**6.5 ஆண்டறிக்கையை அட்டவணைப்படுத்தல்**

2015, 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபத்தின் 6.5.3 ஆம் பிரிவின்படி 2017 மே 31 வரை பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகளும் கட்டுப்பாடும்**

முறைமைகளிலும் கட்டுப்பாட்டிலும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்துக்கு காலம் கல்லூரியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்களில் விசேட கவனம் கோரப்படுகிறது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) களஞ்சிய நிர்வாகம் | – | களஞ்சிய பொருள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கணக்கீடு | – | பொருத்தமான ஏடுகளும் செலவீட்டு குறியீடுகளும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கொடுப்பனவுகள் மீதான கட்டுப்பாடு | – | செலவின உறுதிச்சிட்டைகளுக்கு அனுமதியளித்தலும் சான்றுறிதிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |